தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1969 மார்ச் 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில், பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

டால்மியாபுரம் இரயில் நிலையத்தை பளிங்கானத்தமாக மாற்றம்.

* குறுகிய கால வினா எண் 2.—திரு. ஆர். கருப்பையா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

டால்மியாபுரம் இரயில் நிலையத்தை பளிங்கானத்தம் என்று மாற்றக் கோரி அந்த ஊராட்சி தீர்மானம் அனுப்பியுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, காலத்திற்கும் மக்கள் உணர்ச்சிக்கும் புறம்பான சில பெயர்கள் தெருக்களுக்கும், ரோட்டுகளுக்கும், சில ஊர்களுக்கும் உதாரணமாக பறச்சேரி என்றும், பள்ளச்சேரி என்றும் அழைக்கப்படுவதை மாற்றுவதற்கு அரசு செயற்குறிப்பு தயாரிக்கிறதா? அவைகளுக்கு மாற்றுப் பெயர் கொடுக்கும்படியான ஆலோசனை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : யாருடைய உணர்ச்சிகளையும் புண்படுத்துவதாக இருந்தாலும் அதைப்பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. கே. விநாயகம் : இது நம்முடைய மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறதா? சொன்னதன் விளைவாக அவர்கள் என்ன பதில் அளித்தார்கள்? அதைக் கல்லக்குடி என்று மாற்றவேண்டுமென்று சொன்னார்களே, அது என்ன ஆனது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மத்திய சர்க்காரிடம் இதுபற்றி பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. கல்லக்குடியா அல்லது பழங்கானத்தமா என்பது முக்கியம் அல்ல. டால்மியாபுரம் என்பதை மாற்ற வேண்டுமென்று மாநில அரசு, மத்திய அரசுக்கு சொல்லியிருக்கிறது. கல்லக்குடி என்று பெயர் வைக்கவேண்டுமா அல்லது பளிங்கானத்தம் என்று பெயர் வைக்கவேண்டுமா என்பதுபற்றி மத்திய அரசு முடிவு செய்யும்.

Clash between rival unions in Simpson Ltd.

*381 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether on or about the 12th February 1968, a number of workers were injured in a clash between two rival unions in the Simpson Ltd., Madras ; and

(*b*) if so, the details thereof ?